RIGHTS OF NON-STATUS
WOMEN NETWORK

# கனடாவில் குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்கள்: கூற்றுத்தாள்

## கனடாவில் மக்களுக்கு குடிவரவு அந்தஸ்து இல்லாததற்குரிய காரணங்கள்

- அநேகமான மக்கள் கனடாவிற்கு தற்காலிகமான வதிவுரிமை அனுமதிப் பத்திரத்துடன் வருகின்றனர். அனுமதி கிடைக்கப் பெற்ற காலத்தை விட அதிகமான காலம் தங்கி விட்டால் அவர்கள் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாகி விடுகிறார்கள். சிலர், குடிவரவு அந்தஸ்து இல்லாமல் 10, 20 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களாகக் கனடாவில் இருக்கின்றனர். சிலர், தம் சிறு பிராயம் முதல் இருந்து வருவது மட்டுமல்லாமல், தாம் திரும்ப அனுப்பப்படக் கூடிய அபாயம் கொண்ட தம் பூர்வீக நாட்டினைப் பற்றி எதுவுமே அறியாதவர்களாக இருக்கிறார்கள்.
- பலர், அகதி கோரிக்கை செய்து, அது நிராகரிக்கப்பட்டும், நிலையில்லா எதிர்காலத்தை அல்லது மரணத்தை நோக்கிச் செல்வதை விடச் சட்ட விரோதமாக இருப்பதே மேலென்று தேர்ந்தெடுக்கின்றனர்.
- பல பெண்கள் கனடாவிற்குச் சட்ட பூர்வமாக வருகின்றனர் (தொழில் தருனர், வாழ்க்கைத் துணைவர் அல்லது குடும்ப அங்கத்தவர் அனுசரணையினால்), ஆனால் அனுசரணை செய்தவரால் துன்புறுத்தப்படும் உறவு முறையிலிருப்பதைக் காண்கிறார்கள். நிரந்தர வதிவிடம் பெறு முன்னர் அவர்கள் தப்பித்தால் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாகி விடக் கூடும்.

## கனடாவில் குடிவரவு அந்தஸ்து இல்லாத மக்கள் எண்ணிக்கையின் புள்ளி விவரம்

- குடிவரவு அந்தஸ்து இல்லாத மக்கள், அதிகாரிகளின் கவனத்திற்குட்பட்டு மீண்டும் தமது நாட்டிற்கு அனுப்பப்படுவதைத் தவிர்ப்பதற்காக, ஒளித்து வாழவும் சட்ட விரோதமாக வேலை செய்து சம்பாதிக்கவும் வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறார்கள். இதன் காரணமாக, நுணுக்கமான புள்ளி விவரங்களை அளிப்பது இயலாத காரியமாக உள்ளது. மதிப்பீடுகள் 20,000 முதல் 200,000 தனிப்பட்ட நபர்கள் வரை காட்டினாலும், பலர், இந்த எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கலாம் என்று நம்புகின்றனர்.

## கனடாவில் பெண்களுக்கெதிரான வன்முறையின் புள்ளி விவரம்

**(**இந்தப் புள்ளி விவரங்கள் கனடாவில் குடிவரவு அந்தஸ்து உள்ள பெண்களுக்கு மட்டுமே என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால், குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்களுக்கே முக்கியமாக வன்முறை அனுபவிக்கும் அபாயம் இருந்தாலும், குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய புள்ளி விவரங்கள் எதுவும் இல்லை.)**

- கனேடிய பெண்களில் ஒரு பாதியினர் தமது 16வது வயது முதல் குறைந்த பட்சம் ஒரு சரீர ரீதியான அல்லது பாலியல் ரீதியான வன்முறை சம்பவத்தினை அனுபவித்திருக்கிறார்கள்.
- அனைத்து கனேடிய பெண்களில் ஏறக்குறைய ஒரு பாதியினர் (45%) தமக்குத் தெரிந்த ஆண்கள் மூலம் வன்முறையினை அனுபவித்திருக்கிறார்கள்.
- கனேடிய பெண்களில் 4ல் ஒருவர் தம் வாழ்க்கைத் துணைவரால் சரீர ரீதியான அல்லது பாலியல் ரீதியான வன்முறையினை அனுபவித்திருக்கிறார்கள்.
- தற்போதைய அல்லது கடந்த கால வாழ்க்கைத் துணைவரால் தாக்கப்பட்ட பெண்களில் 63% ஒன்றுக்கும் மேற்பட்ட தருணங்களில் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள்.
- வாழ்க்கைத் துணைவரால் தாக்கப்பட்ட பெண்களில் மூன்றிலொரு பங்கினர், அந்த உறவின் ஏதாவதொரு நிலையில் தங்கள் உயிருக்காகப் பயந்திருக்கின்றனர்.
- வாழ்க்கைத் துணைவரிடமிருந்து பிரிந்த பெண்களே, தமக்கு அந்தரங்கமானவர்களால் பெண்கள் கொலைகளுக்கு பலியாகும் அதிக அபாயத்திற்கு முக்கியமாக ஆளாகிறார்கள்.

- 1995ம் ஆண்டு புகலிடம் தேடிச் சென்ற பெண்களில் இருபத்தைந்து சதவீதமானோருக்கு, மருத்துவ உதவி தேவைப்படும் அளவிற்குக் காயங்கள் இருந்தன, மற்றும் 3% பெண்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டி நேரிட்டது. (Bunge and Levett 1998, 19)
- ஊனக் குறைபாடுகள் கொண்ட பெண்களில் நாற்பத்திரண்டு சதவீதமானோர், துன்புறுத்தப்பட்ட உறவு முறையில் இருந்திருக்கிறார்கள் அல்லது இருக்கின்றார்கள். (DisAbled Women's Network 1989)
- ஒன்ராறியோவில் ஆதிக்குடிப் பெண்களில் பத்தில் எட்டு பேர், பிரத்தியேகமான முறையில் வன்முறையினை அனுபவித்திருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (Ontario Native Women's Association 1989, 7)

அநேகமான புள்ளி விவரங்கள் பெறப்பட்ட இணைய தளம் :
http://www.cafv.inet2000.com/handouts/vaw/ViolenceAgainstWomeninCanada.htm

## கனடாவில் குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்களும் பிள்ளைகளும் எதிர் கொள்ளும் தடைகள்

- கல்வி கற்பதற்கு வரையறை (அதாவது ESL & பொதுக் கல்வி)
- வரையறுக்கப்பட்ட/பற்றாக் குறையான சுகாதார பராமரிப்பு
- வரையறுக்கப்பட்ட/பற்றாக் குறையான இல்ல வசதிகள்
- வரையறுக்கப்பட்ட சேவைகள்
- பாகுபாடு
- தப்பான அபிப்பிராயம்
- இனப் பாகுபாடு
- பால் ரீதியான பாகுபாடு
- துன்புறுத்தல் (சரீர ரீதியான, பால் ரீதியான, மன ரீதியான)
- மொழித் தடைகள்
- வேலையில்லாமை/தகுதிக்குத் தகுந்த வேலை அமையாமை
- தொழில் தருணர்களால் சுரண்டப்படுதல்
- தம் நாட்டிற்குத் திரும்ப அனுப்பப்படுவோம் என்ற பயம்
- தனியாக ஒதுக்கப்படுதல்
- 911 சேவைகளை அடையப் பயம்

## குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்களுக்கு வன்முறை அனுபவிக்கும் அபாயம் அதிகமாக இருப்பது ஏன்?

குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்கள், மற்றப் பெண்களைப் போன்று, ஒரே மாதிரியான ஆண் பெண் இன வன்முறையினை எதிர் நோக்குகிறார்கள், ஆனால் அவர்கள் வாழும் பலவீனமான நிலைமை காரணமாக வன்முறை அபாயம் அவர்களுக்கு அதிகமாக உள்ளது:

- அவர்களுக்குத் தகவல், ஆலோசனை மற்றும் ஏதாவது சமூக சேவைகள் இருப்பின் அவைகளை அடைய மிகவும் குறைந்த அளவு வழிகளே உண்டு.
- காவல் துறை அதிகாரிகளுக்குக் குடிவரவு சார்பாக யாரையும் கைது செய்யவோ அல்லது தடுத்து நிறுத்தவோ அதிகாரம் உண்டாகையால், மீண்டும் தம் நாட்டிற்குத் திரும்ப அனுப்பப்படும் அபாயம் இல்லாமல் ஒரு அவசர நிலைமைக்கு அவர்களை உதவிக்கு அழைக்க முடியாது.
- அவளுடைய துணைவர் மேல் தாக்குதல் குற்றச்சாட்டு செய்யப்பட்டால், அது அவளுக்குப் பங்கமான விளைவுகளை உண்டு பண்ணக் கூடும்.
- அவர்களுக்கு இலகுவில் மருத்துவ சேவைகளைப் பெற முடியாது.

## என்ன நிகழ வேண்டும்?

- கனடாவில் குடிவரவு அந்தஸ்து இல்லாத அனைவரையும் சட்ட பூர்வமாக ஒழுங்குபடுத்துதல்
- காவல் துறை அதிகாரிகளும் வேறு சேவை வழங்குவோரும், குடிவரவு அந்தஸ்து பற்றிக் கேட்காமலிருப்பதும், கனடா குடிவரவிற்கு அறிவிக்காமலிருப்பதும். 'கேட்காதே, சொல்லாதே' ('Don't Ask, Don't Tell') என்னும் ஒரு செயற் திட்டமானது, குடிவரவு அந்தஸ்து பாகுபாடு ஏதுமின்றி, நகர வாசிகள் அனைவருக்கும் நகரத்தின் சேவைகளைத் தரும்.
- குடிவரவு அந்தஸ்து உள்ள பெண்களைத் துன்புறுத்தும் அனுசரணையாளர்கள் மற்றும் தொழில் தருனர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக குடிவரவு சட்டங்களில் மாற்றங்கள்

## குடியமர்வு நிலை இல்லாத மக்களுக்கு ஆதரவாகப் பிரசாரங்கள்

- **ஸ்ரேரஸ் (STATUS)** என்பது, குடிவரவு அந்தஸ்து இல்லாமல் கனடாவில் வாழும் அனைவரையும் சட்ட பூர்வமாக ஒழுங்குபடுத்துவதனை ஆதரித்துப் பேசும் தனி நபர்களுடைய ஒரு பரந்த இணைப்பாகும்.

மின் அஞ்சல் status@ocasi.org அல்லது அழையுங்கள் 416 322-4950 x239

'கேட்காதே, சொல்லாதே' (**Don't Ask Don't Tell**) என்னும் பிரசாரமானது, ரொறன்ரோ மாநகரை அடிப்படையாகக் கொண்ட பல தொகுதிகளின் கூட்டுறவினால் ஒழுங்கமைக்கப்படுகிறது. இது ரொறன்ரோவின்

யாரும் சட்ட விரோதமானவர்கள் இல்லை (No One Is Illegal Toronto) என்னும் அமைப்பினால் 2004ம் ஆண்டு மார்ச் மாதம் சம்பிரதாயப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது. மின் அஞ்சல் info@dadttoronto.org

இந்தக் கூற்றுத் தாள், குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்களின் உரிமைகள் வலைப்பின்னலினால் (**Rights of Non-Status Women Network)** தயாரிக்கப்பட்டது. குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்களின் உரிமைகள் வலைப்பின்னலானது, ரொறன்ரோவில் உள்ள பிரதிநிதி நிலைய வலைப்பின்னல் மற்றும் பொது ஜன அங்கத்தவரின் ஒரு ஒழுங்கமைப்பாகும். எமது அடிப்படை நோக்கம், கிரமமாக இணைந்த பொதுக் கல்வி மற்றும் ஒழுங்குமுறை நோக்கத்துடன் ஆதரித்துப் பேசுதல் மூலம், ஆண் பெண் பாகுபாட்டினால் வன்முறையினால் பாதிக்கப்பட்ட குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்கள், சேவைகளையும் ஆதாரங்களையும் அடைய எதிர் கொள்ளும் தடைகளைப் பற்றிய எண்ணங்களைத் தெரிவிப்பதே ஆகும்.

மேலதிக தகவல்ளுக்கு அல்லது ஈடுபடுவதற்கு, தயவு செய்து அழையுங்கள்: அந்திரேயா குண்ராஜ், வெளிக்கள நிர்வாகி, (Andrea Gunraj, Outreach Manager) METRAC (416-392-3135; outreach@metrac.org) அல்லது துன்புறுத்தப்பட்ட பெண்கள் ஆலோசனைச் சபை ரொறன்ரோ (the Woman Abuse Council of Toronto) (416-944-9242); wact@womanabuse.ca).

**நீங்கள் ஆபத்தான நிலையில் உள்ள ஒரு பெண்மணியாகில் அல்லது துன்புறுத்தப்படும் ஒருவரை உங்களுக்குத் தெரியுமானால், தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள் தாக்கப்பட்ட மகளிர் உதவி இணைப்பு (Assaulted Women's Helpline) 1-866-863-0511 அல்லது 1-866-863-7868 (TTY)**